பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 05 புதன்கிழமை 21.12.2023 கதிர் 405

## பொது ஜன பெரமுன கட்சிக்குள்

# தம்மிக்க உட்பட நால்வரின் பெயர்கள் ஜனாதிபதி வேட்பாளருக்கு பரிந்துரை

## செயலாளர் சாகர காரியவசம் தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக பெரேரா உட்பட நால்வரின் பெயர் ஜனாதிபதி வேட்பாளராக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் 2



### இனி இது ரகசியம் அல்ல!

சீ... சீ... இந்தப் பழம் புளிக்கும் என்கிற கதையாகிவிட்டது ரணில் - விக்னேஸ்வரன் உறவு. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி என்று கூறிக்கொண்டு, விக்னேஸ்வரனைப் பயன்படுத்தி தமிழ் அரசுக் கட்சியை வழிக்குக் கொண்டு வருவதற்குப் பார்த்தார் ரணில். ஆனால், அது முடியவில்லை. அதனால் அந்த முயற்சியைக் கைவிட்டது மட்டுமல்ல விக்னேஸ்வரனையும் கைவிட்டுவிட்டார்.

இதனால் இப்போது ரணிலுடன் கோபித்துக்கொண்டு முரண்டுபிடிக்கத் தொடங்கியிருக்கிறார் விக்னேஸ்வரன். ஜனாதிபதி இன்று கூட்டியிருக்கும் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற 2

## மேல் மாகாணத்தில் மட்டும் இதுவரை 1000 பேர் கைது

யுக்திய தேடுதல் நடவடிக்கையில் மேல்மாகாணத்தைச் சேர்ந்த அதிகளவானோர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேல்மாகாணத்தில் 953 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளதோடு அவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை நேற்றையதினம் மருதானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 2

## அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க வாழ்க்கைச் செலவு குழுவொன்றை அமைக்க வேண்டும்

### ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுப்பதாக மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் தெரிவிப்பு!

வாழ்க்கை செலவு அதிகரித்து வருவதால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகவும், பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மூடப்பட்டுள்ள மஹர சிறைச்சாலை பள்ளிவாசலை நேற்று முன்தினம் பார்வையிட சென்றிருந்தபோது, செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்து வருகின்றன. சந்தையில் அரிசி, மரக்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால், நுகர்வோர் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். கூலித் தொழில்செய்து பிழைப்பு நடத்தும் மக்களால் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்க அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றேன்.

நல்லாட்சிக் காலத்தில் நான் வர்த்தக அமைச்சராக இருந்த போது, அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாராவாரம் எம்மைச் சந்தித்து, அத்தியாவசிய பொருட்களின் விலைகளின் ஏற்ற இறக்கம் தொடர்பில் 2

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரினது கருத்துக்கு சட்டத்தரணிகள் சங்கம் மறுப்பு

பதில் பொலிஸ் மா அதிபர் நியமனத்தை எதிர்த்த சட்டத்தரணிகள் போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கருத்தினை முற்றாக நிராகரிப்பதாக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமனம் என்பன தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அச்சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் 8

## உடன் தலையிடக்கோரி சட்டத்தரணிகள் கடிதம்

### ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பு

சட்டத்தரணிகள் தொடர்பாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்த கருத்து விடயத்தில் ஜனாதிபதி உடனடியாகத் தலையிட வேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற சட்டத் தரணிகள் சங்கம் இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்றையதினம் கடிதமொன்றை அனுப்பியுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அக்கடிதத்தில், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளை குறைத்து 8

## சஜித்தே எமது ஒரே வேட்பாளர் ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் எமதுகட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவே என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் தெரிவித்தார்

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சிக்குத் தலைவர் உள்ளார். அவர்தான் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர். அதில் எவ்விதமான மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. அவர்தான் சஜித் பிரேமதாச.

நாம் ஏனைய கட்சியின் தலைவரை ஒருபோதும் எமது வேட்பாளராக களமிறக்கப்போவதில்லை. இதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என்றார்.

## அயலுறவு அமைச்சர் காத்மண்டு பயணம்

அயலுறவு அமைச்சர்கள் மட்டத்திலான இலங்கை - நேபாள கூட்டுஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வில் கலந்து கொள்வதற்காக அயலுறவு அமைச்சர் அலி சப்ரி நேற்று காத்மண்டு பயணமானார்.

இருநாடுகளுக்கும் இடையிலான கூட்டு ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கை சார்பில் கலந்துகொள்ளவிருக்கும் உயர்மட்டக் குழுவுக்குத் தலைமை தாங்கவுள்ள அமைச்சர் அலி சப்ரி, நேபாள வெறியுறவுத்துறை அமைச்சர் நாராயண் பிரகாஷ் சவுத்துடன் இணைந்து இலங்கை - நேபாள கூட்டு ஆணைக்குழு வின் ஆரம்ப அமர்வுக்கு இணைத் த 2

## சுயாட்சி இலக்கை அடைய காலடியை வைக்கவேண்டும்

### கட்சியின் 75ஆவது பிறந்த நாள் கொண்டாட்டத்தில் சுமந்திரன் உரை

இலங்கைதமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளைத்தலைவரும் முன்னாள் தவிசாளருமானகிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் கட்சி பணிமனையில் இப்பிறந்த நாள் கொண்டாட்டம் நடைபெற்றது. தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மற்றும் இளைஞர் அணி துணைத் தலைவர் அருள்நிதாஞ்சன் 2

## பாடசாலை அருகே 6 பேர் கைது போதைப்பொருள் குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை அவர்களிடம் போதைப் பொருளை கொள்வனவு செய்த 15 மாணவர்கள் இனம்காணப்பட்டு, அவர்களை பொலிஸார் கடுமையாக எச்சரித்ததுடன், போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வை வழங்கி பெற்றோர்களிடம் கையளித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையின்போது யாழ். புறநகர் பகுதியில் 8

## பல்கலை மாணவன் கைது

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மாணவனை கைது செய்து சோதனையிட்டபோது, அவரிடமிருந்து போதை பொருள் மீட்கப்பட்டது எனப் பொலீஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட மாணவன் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கிறார் என்றும் அவர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஐ.நா. கண்காணிப்பை முடித்து வைக்கும்

### அலன் கீனன் தெரிவிப்பு

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவது தொடர்பில் இலங்கை ஆட்சியாளர்களுக்கு சர்வதேச சமூகம் வழங்குகின்ற அங்கீகாரம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செயற்திறன் மிக்க கண்காணிப்பை முடிவுக்குக் கொண்டு வரும் எனவும், அது நல்லிணக்க செயன்முறையில் பின்னடைவை ஏற்படுத்தும் எனவும் நெருக்கடி கண்காணிப்புக் குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன் எச்சரித்துள்ளார்.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிரி 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

உறுப்பினர்களுடனான சந்திப்பைத் தான் புறக்கணிப்பார் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையில்

ஜனாதிபதியுடனான சந்திப்பில் தான் பங்கேற்கமாட்டேன் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்புக்கு இன்று வருமாறு ஜனாதிபதி செயலகம் அழைப்பு விடுத்திருந்த நிலையில் அதற்குப் பதிலளித்து அனுப்பிய கடிதத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்ற மிக முக்கியமான விடயம் தொடர்பில் ஜனாதிபதியால் ஏற்கனவே வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அமுல்படுத்தாமல் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடுவதன் மூலம் எந்தவொரு பயனுள்ள நோக்கமும் நிறைவேறாது என்பதே எனது கருத்தாகும்.

ஆகவே, நடைபெறவுள்ள ஜனாதிபதியால் அழைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் நான் கலந்து கொள்ளவில்லை என்பதில் நான் வருந்துகிறேன். எனது முடிவை ஜனாதிபதிக்கு தெரிவிக்கவும் என்று விக்னேஸ்வரன் தனது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தம்மிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாட்டை சிறந்த முறையில நடத்தினோம். திட்டமிட்ட வகையிலான முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் அனைத்தும் பொய்யாக்கப்பட்டுள்ளன. இடம் பெறவுள்ள தேசிய தேர்தல்களை எதிர்கொள்ள கட்சி என்ற ரீதியில் நாங்கள் தயாராகவுள்ளோம்.

பொதுஜன பெரமுன தலைமையிலான ஆட்சி வரிச் சலுகைகளை வழங்கியதால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என்று குறிப்பிட்டுக் கொண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மஹிந்த ராஜபக்ஸ, கோட்டபய ராஜபக்ஸ மற்றும் பஸில் ராஜபக்ஸ ஆகியோருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள்.

ஆனால் தற்போது வரி அதிகரிப்புக்கு எதிராக விரிவுரையாளர்கள் வீதியில் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். வரி கொள்கை தொடர்பில் கற்றவர்கள் உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தற்போது மாறுப்பட்ட கருத்துகள் குறிப்பிடப்படுஞீன்றன. பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் உத்தியோகப்பூர்வ தீர்மானங்கள் ஏதும் அறிவிக்கப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக பெரேரா உட்பட நால்வரின் பெயர் ஜனாதிபதி வேட்பாளராக பரிந்துரைக்கப்பட்டுள்ளது ஆனால் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை. கட்சியின் செயற்குழுவில் கலந்துரையாடி வெகுவிரைவில் உறுதியான தீர்மானத்தை அறிவிப்போம்.

ஆட்சியாளர்களை நெருக்கடிக்குள்ளாககூடாது என்பதற்காகவே வற் வரிக்கு ஆதரவாக வாக்களித்தோம். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டால் அதற்கு எதிராக செயற்படுவோம் என்றார்.

## மேல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேடுதலில் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் 21 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொச்சிக்கடையில் பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் விசேட தேடுதல்கள் நடைபெற்றன. இதன்போது 200கிராம் போதைப்பொருடன் 19 கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டாருக்கும் இலங்கைக்கும் இடையில் பாரிய அளவில் போதைப்பொருள் கடத்திலில் ஈடுபட்டதாக கூறப்படும் பிங்கி என்பவரும் நான்கு சந்தேக நபர்களும் அலுபோமுல்லவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

26மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் மூன்று சந்தேக நபர்கள் கேகாலையில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை நாடாளவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் யுக்திய தேடுதல் வேட்டையில் நேற்று அதிகாலையுடன் நிறைவடைந்த 24மணிநேரத்தில் 2296பேர் கைது செய்யப்பட்டள்ளனர். இவர்களில் 109பேர் தடுத்து வைக்கபட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவதோடு 184பேர் புனவாழ்வுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## உண்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வோல்ட் மற்றும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் சாண்டில் ஷால்க் ஆகியோர் உத்தியோகபூர்வ பயணமாக வடமாகாணத்துக்குச் சென்றிருப்பதுடன், அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாக அம்மூன்று இராஜதந்திரிகளுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளில் வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போது இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான முயற்சி குறித்து கலந்துரையாடப்பட்டது.

நாடளாவிய ரீதியில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக்கொண்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை உருவாக்குவதற்கு ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளுக்கு சுவிட்ஸர்லாந்து, தென்னாபிரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னின்று நிதி, ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சார்ந்த ஒத்துழைப்புக்களை வழங்கிவருவதாகத் தகவல்கள் வெளியாகி, வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் பல்வேறு விமர்சனங்களைத் தோற்றுவித்திருக்கும் பின்னணியிலேயே இவ்விஜயம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் (டுவிட்டர்) பதிவொன்றைச் செய்திருக்கும் இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிரிவோல்ட், இந்தப் பயணத்தின்போது வடக்கில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் குறிப்பாக நல்லிணக்கத்துடன் தொடர்புடைய விவகாரங்கள் பற்றி பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடினர் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதனை மேற்கோள்காட்டி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருக்கும் நெருக்கடிகண்காணிப்புக்குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன், 'இலங்கை தொடர்பான ஜெனிவா பொறிமுறை செயலிழக்கின்றதா?' எனக் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

அதுமாத்திரமன்றி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை ஸ்தாபிப்பது தொடர்பில் இலங்கை ஆட்சிக்கு சர்வதேச சமூகம் வழங்குகின்ற அங்கீகாரம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் துடிப்பான கண்காணிப்பை முடிவுக்குக்கொண்டுவரும் எனவும் அலன் கீனன் எச்சரித்துள்ளார்.

அத்தோடு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பின்றி நல்லிணக்கத்தை அடைந்துகொள்வதை முன்னிறுத்திய நகர்வுகளின் முன்னேற்றம் மந்தகரமானதாகவே காணப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அயலுறவு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைமை தாங்குவார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அமர்வில் வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, கல்வி, பாதுகாப்பு, கலாசாரம் மற்றும் மக்கள் தொடர்பு என்பன உள்ளடங்கலாக பல்வேறு துறைகளிலும் இலங்கை-நேபாளம் ஆகிய இருநாடுகளுக்கும் இடையில் நிலவும் ஒத்துழைப்பு குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது.

அதுமாத்திரமன்றி விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை முன்னிறுத்திய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் இதன்போது கைச்சாத்திடப்படவுள்ளது.

அதேவேளை நாளை வெள்ளிக்கிழமைவரை காத்மண்டுவில் தங்கியிருக்கும் அமைச்சர் அலி சப்ரி, கூட்டு ஆணைக்குழு அமர்வின் பக்க அம்சமாக நேபாள வெளியுறவுத்துறை அமைச்சர் நாராயண் பிரகாஷ் சவுத்துடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளார்.

அதுமாத்திரமன்றி அவர் நேபாள ஜனாதிபதி ராம் சந்திர பவுடேல் மற்றும் பிரதமர் புஷ்;ப கமல் தஹல் ஆகியோரையும் மரியாதை நிமித்தமாக சந்திக்கவிருப்பதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்விஜயத்தின்போது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேபாளத்திலுள்ள புலம் பெயர் இலங்கையர்களையும் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுயாட்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரும் கட்சி பிரமுகர்களும் நிகழ்வில் கலந்துகொண்டார்கள் .

சுமந்திரன் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தமிழருக்காக வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்காக 75 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.

எமது மக்கள் தங்களுடைய கருமங்களை தாங்களே ஆற்றக்கூடிய வகையில் நாட்டில் ஏனைய இன மக்களுடன் சமமாக வாழவேண்டும் என்ற இலக்கை நோக்கி இந்தக் கட்சி பயணிக்கிறது. அதில் இணைந்து செயல்படுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

சுயாட்சி என்ற இலக்கை அடைய இந்த 75ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்க வேண்டும் . என்றார்.

## அத்தியாவசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்தாலோசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால், தற்போது அப்படியொரு நடைமுறை இருப்பதாகத் தெரியவில்லை.

இப்பொழுது அவர் ஜனாதிபதி என்பதால் வேலைப்பளு அதிகரித்துவிட்டதோ என்னவோ. எவ்வாறாயினும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள். இது தொடர்பில் வர்த்தக அமைச்சரோடு பேசி, வாழ்க்கைச் செலவுக் குழு ஒன்றை நியமித்து, அரிசி, மரக்கறிகள் போன்ற அத்தியாவசிய பொருட்களையாவது மக்களுக்கு சாதாரண விலைகளில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்றார்.

இதேவேளை, முட்டை இறக்குமதி தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தவர், முட்டைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை ஒருபோதும் நான் அனுமதிக்கமாட்டேன். நாட்டில் இவ்வளவு காலமும் இடம்பெறாத ஒரு வேலைத்திட்டமே இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதை உடனடியாக நிறுத்த வேண்டும். அதேபோன்று, முட்டை உற்பத்தியாளர்களும் முட்டையை சாதாரண விலையில் மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.







காலைக்கதிர் Kalaikkathir

# அரசாங்கத்தை தமது இஷ்டத்திற்கு ஆட்டிப் படைக்கும் வர்த்தகர் குழு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வேதனை



இந்த தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு உதவுவது அரசியலை விட நாட்டைப் பற்றிய சிந்தனையே என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் நகரஅபிவிருத்திமற்றும்வீடமைப்புஅமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாடு வழமைக்குத் திரும்பியுள்ள இந்த தருணத்தில் ஜனாதிபதியின் காலை வாரி விடும் சிலரின் முயற்சிகளுக்கு இடமளிக்க முடியாது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட்டு அடுத்த வருடம் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சுமார் ஒன்பது வருடங்களாக கைவிடப்பட்டு மரந்தகஹமுலவில் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட அரிசி மொத்த விற்பனை நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்தார்.

இந்நாட்டில்;தனியாரின்நெல்ஏகபோகத்தை முறியடிக்கும் நோக்கில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்சவால் இந்தக் களஞ்சியசாலை வளாகம் மற்றும் மொத்த வர்த்தக நிலையம் நிர்மாணிக்கப்பட்டது. அது 2014 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திவினெகும திட்டத்தின் ஊடாகவே செயற்படுத்தப்பட்டது.

ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இந்த அரிசி களங்சியசாலை வளாகம் 2015 இல் இல்லாதொழிக்கப்பட்டது. அதே நேரத்தில், கடந்த ஒன்பது ஆண்டுகளாக, இந்த களங்சியசாலை வளாகம் மற்றும் மொத்த வர்த்தக மையம் காடு போல் வளர்ந்து காணப்பட்டது.

அதன்படி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் தலையீட்டின் பேரில், இந்தக் களஞ்சியசாலை வளாகம் புனரமைக்கப்பட்டது. மரந்தகஹமுல களஞ்சியசாலை வளாகம் மற்றும் மொத்த வர்த்தக நிலையத்தின் அனைத்துப் பணிகளையும் விரைந்து முடிக்க திறைசேரியில் இருந்து பணம் கேட்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த ஆண்டு அமைச்சரவை பத்திரத்தையும் சமர்ப்பித்திருந்தார். மரந்தகஹமுல களஞ்சியசாலை வளா கம் மற்றும் மொத்த வர்த்தக நிலையம் அமைந்துள்ள காணி சுமார் இரண்டு ஏக்கர் அளவில் இருக்க வேண்டும். 115 விற்பனை நிலையங்களைக்; கொண்ட இதனை நிர்மாணிப்பதற்கு 459 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இங்குகட்டுமானப்பணிகள்முழுவதையும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளது. இந்தக் களஞ்சியசாலை வளாகத்தில் சுமார் 75,000 மெற்றிக் தொன் அரிசியை சேமித்து வைக்கும் வசதிகள் உள்ளன.

அரிசி களஞ்சியசாலை வளாகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போது அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறியவை வருமாறு -

இந்த அரிசி களஞ்சியசாலை வளாகம் பஸில் ராஜபக்சவின் காலத்தில் கட்டப்பட்டது. அது நாட்டின் அரிசி ஏகபோகத்தை உடைக்கும் வகையில் எதிர்காலத்தைப் பற்றிய பார்வையைக் கொண் டிருந்தது. இன்று இந்நாட்டில் அரிசி வியாபாரம் ஒரு சில வர்த்தகர்களின் கைகளில் உள்ளது. அந்த வர்த்தகர்கள் தங்கள் விருப்பப்படி அரசை ஆட் டிப்படைத்து கையாளுகிறார்கள்.

அரசாங்கம் என்ற வகையில், நுகர்வோர்மற்றும்விவசாயத்தை நாம் பார்க்க வேண்டும். ஆனால் வணிகர்களுக்கு அப்படி இல்லை. அதனால்தான் மேற்கூறிய வர்த்தகர்கள்; கொள்ளையடித்து நெல்லைவாங்குகிறார்கள். அதை எடுத்து ஆண்டுக்கணக்கில் சேமித்து வைத்து, அரிசி தட்டுப்பாடு காலத்தில் அதிக விலைக்கு அரிசியை விற்கின்றனர்.

அதனால், சமீப காலமாக, சிறு நெல் விவசாயிகள் இயற்கையாகவே அழிந்து வருகின்றனர். அவர்கள் அந்த விவசாய நடவடிக்கைகளை அறவே கைவிட்டு போனார்கள். அப்போது மரந்தகஹமுல அரிசி வியாபாரிகள் அரிசி ஏகபோகத்தை முடிவுக்கு கொண்டு வர தம்மை பலப்படுத்துமாறு பல சந்தர்ப்பங்களில் ஏற்கனவே உள்ள அரசாங்கங்களுக்குஆலோசனைவழங்கினர். ஆனால் அது பலனளிக்கவில்லை.

இன்று திறந்து வைக்கப்பட்ட மரந்தகஹமுல அரிசி களஞ்சியசாலை வளாகம் பொருளாதார மையமாக மாறவுள்ளது. லக்ஷ்மன் ஜயக்கொடி மற்றும் ரெஜி ரணதுங்க ஆகியோரின் காலத்தில் தான் நெதகமுவ பிரதேசத்தில் உள்ள முந்திரி வியாபாரிகளுக்கும், மரந்தகஹமுலவில் உள்ள அரிசி வியாபாரிகளுக்கும் தனியான இடங்கள் வழங்கப்பட வேண்டும் என்று முன்மொழிவு கூறப்பட்டது.

அந்த முன்மொழிவுகள் செயல்படுத்தப்படும் போது, இந்த அம்சங்கள் மேம்படும். இந்த இடத்தில் நெல் களஞ்சியசாலை உள்ளது. அந்த களஞ்சியசாலைகளில் உள்ள அரிசியை கம்பஹா மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்குவதற்கான வழியை நான் ஆளுநருடன் கலந்துரையாடினேன்.

அதற்காக குறைந்த வட்டியில் கடன் வழங்கும் முறையும் உருவாக்கப்படுகிறது. மாகாண சபை ஒதுக்கீட்டில் இருந்து கம்பஹா வங்கி சங்கத்திற்கு குறைந்த வட்டியில் கடன் வழங்குமாறு ஆளுநரிடம் கூறினேன். நான் மாகாண முதலமைச்சராக இருந்த போது கம்பஹா வங்கி சங்கத்திற்கு அவ்வாறான பணத்தை வழங்கினேன். சிறு வர்த்தகர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இதைத் தொடங்கினோம். அதிக பருவத்தில் நெல்லை பெற்று திட்டத்தை செயல்படுத்துவோம் என நம்புகிறோம்.

நாடு பொருளாதார நெருக்கடியை சந்தித்து வரும் காலம் இது. இதற்கு முன்பும், நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தபோது, கிராமப்புற வாழ்க்கையை வலுப்படுத்த மக்களுக்கு கோழிகள் வழங்கப்பட்டன. அதனால், குறைந்த விலையில் இறைச்சி மற்றும் முட்டைகளை வழங்க முடிந்தது. ஒரு காலத்தில் கோழி இறைச்சி 200-300 ரூபாவுக்கும், முட்டை 15-20 ரூபாவுக்கும் விற்கப்பட்டன. ஆனால் அதுவும் இன்று வர்த்தகர்களால்; நிர்வகிக்கப்படுகின்றது.

அதிகளவில் கோழிகளை உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்கினால், மக்களின் ஊட்டச்சத்து தேவைகளைப் பூரணப்படுத்த முடியும். இந்த பொருளாதார நெருக்கடி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டதாக சிலர் கதையளக்கின்றனர். இல்லை. இது குறுகிய கால நெருக்கடி அல்ல. வரி குறைக்கப்பட்டாலும் அல்லது அதிகரித்தாலும் விமர்சனம் உண்டு. நாம் எடுக்கும் முடிவுகள் பிரபலமான முடிவுகள் அல்ல.

கோட்டாபய ராஜபக்சவுக்கு இதுவரை யாரும் எதிர்கொள்ளாத பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கொரோனா காலத்தில், மக்களை காப்பாற்றுவதா அல்லது பொருளாதாரத்தைக் காப்பாற்றுவதா என்பதை நாம் முடிவு செய்ய வேண்டியிருந்தது. பொருளாதாரத்தை பின்னர் காப்பாற்ற முடியும் என்பதால் நாட்டை மூட முடிவு செய்தோம். எனவே மக்களின் உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும். நாடு மூடப்பட்டால் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்பது எங்களுக்குத் தெரியும். மூன்று தடுப்பூசிகளையும் நாட்டு மக் களுக்கு வழங்கி நாட்டை திறக்க முற்பட்ட போது, தொழிற்சங்கங்கள் அதனை எதிர்த்தன. அப்போது நாம் எடுத்த முடிவுகள் கொள்கையளவில் நல்லனவாக இருந்தாலும், அவை தவறான முடிவுகளாக இருக்கலாம். அன்னிய கையிருப்பு இல்லாமல் எரிவாயு, மருந்து, எரிபொருள் இல்லாமல் தவிக்கும் போது சொந்தக்காரர்கள் சிலர் வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்புவதை நிறுத்துங்கள் என்றார்கள்.

ஆனால் அந்த நெருக்கடிகளை ஓராண்டுக்குள் சமாளித்துவிட்டோம். நாடு ஸ்திரமாகிக்கொண்டிருக்கும்போது, நாட்டை மீண்டும் சீர்குலைக்க சிலர் முயற்சிக்கின்றனர். மிகவும் நன்றாக வாழ முடியாது. எங்கள் வீடுகள் ஏன் எரிக்கப்பட்டன? போராட்டம் ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரலாக இருந்தது. போதைப்பொருள் வியாபாரிகள் போராட்டம் நடத்திய போது என்ன செய்தார்கள்? நாட்டுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

எங்கள் வீடுகள் எரிக்கப்பட்டாலும் நாங்கள் கிராமத்தைவிட்டு வெளியேறவில்லை. எனக்கு உடுகம்பளையில் தங்குவதற்கு இன்னும் இடமில்லை. ஆனால் நாங்கள் முன்பை விட வலுவாக கிராமத்திற்கு செல்கிறோம். எமக்கு எதிராகக் கூச்சலிடும் மக்கள் இன்று கிராமத்திற்கு என்ன செய்தார்கள்? நாங்கள் கட்சி மாநாடு நடத்தும்போது, மற்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

ஏனென்றால்நாங்கள்வலிமையானவர்கள். போராட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியில், நாட்டைப் பொறுப்பேற்கும் தலைவர் இல்லை. சஜித் பிரேமதாஸவையும் சரத்பொன்சேகாவையும்அன்றுஅழைத்தோம். ஆனால் யாரும் வரவில்லை. அன்று ரணில் விக்கிரமசிங்க மட்டும் முன் வந்தார்.

இப்போது இது பற்றி பேசும் போது நான் ரணிலின் பின்னால் செல்கிறேன் என்று சிலர் காட்ட முயற்சிக்கின்றனர். நான் அப்படிப்பட்டவன் அல்லன். ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்தவர்கள் என்னைப் போல் வேறு யாரும் இல்லை. ஆனால் நான் நல்ல வியங்களுக்கு உதவுகிறேன். ஒரு வருடம் முன்பு நாடு எப்படி இருந்தது என்பது எங்களுக்கு நினைவிருக்கிறது. அரசியலுக்கு முன் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். அதன் அடிப்படையில் நாங்கள் உதவுகிறோம்.

நாடு இயல்பு நிலைக்குத் திரும்பும்போது, சிலர் அதைத் திரும்பப் பெற முயற்சிப்பார்கள். அதை அனுமதிக்க முடியாது. அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அதிகளவுநிதிஒதுக்கப்பட்டுள்ளது. இன்றுமின்சாரக் கட்டணம் உயர்ந்துள்ளது. எரிபொருள் விலை அதிகம். இது எங்களுக்குத் தெரியும். எதிர்காலத்தில் பொருளாதார நெருக்கடிகள் தீர்ந்து மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும். எனவே, அடுத்த ஆண்டை நம்பிக்கையுடன் எதிர்பார்ப்போம். - என்றார்.

இந்த நிகழ்வில் மேல்மாகாண ஆளுநர் மார்ல் ஆஃப் தி எயார்ஃபோர்ஸ் ரொான் குணதிலக்க, இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி, திவுலபிட்டிய பிரதேச சபையின் முன்னாள் தலைவர் இந்திக ஜயசிங்க மற்றும் பலர் கலந்துகொண்டனர். (05)

# மின்சாரசபை பொறியாளர் சங்கம் தீவிரவாத அமைப்பு; காஞ்சன சீற்றம்



மின்சாரசபை பொறியியலாளர் சங்கம் என்பது தீவிரவாத சங்கமாகும். எந்தவொரு சங்கமும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பில் முன்வைக்கும் பரிந்துரைகளையும் யோசனைகளையும் நாம் ஏற்றுக்கொள்வோம்.

ஆனால் அவற்றின் அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் ஒருபோதும் அடிபணிய மாட்டோம் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மின்சாரசபை பொறியியலாளர் சங்கம் என்பது தீவிரவாத சங்கமாகும். இலங்கை மின்சாரசபைக்குள் முழுமையாக தமது சர்வாதிகாரத்தைக் கட்டியெழுப்பிய சங்கமாகும்.

3 சந்தர்ப்பங்களில் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான சட்டமூலம் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடியதற்கானஆதாரங்கள்என்னிடம் உள்ளன. அதற்கான காணொளி பதிவுகளும் உள்ளன.

இந்த சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போது நாட்டு மக்களுக்கு8மணித்தியாலங்கள் மின்சாரத்தை துண்டித்தது இந்த சங்கமே. நாம் மின் விநியோகத்தை துண்டிப்போம் என்பது அவர்கள் தெளிவாக அறிவித்தனர்.

இந்த சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டமைக்காகவே அவர்கள் இவ்வாறு செயற்பட்டனர்.

மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு புதிய இளம் அதிகாரிகள் குழு உள்ளது. அவர்கள் இதற்காக தமது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளனர்.

அவர்களுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையிலேயே இந்த சங்கமும் செயற்படுகிறது.

மின்சாரசபை பொறியியலாளர்கள் சங்கம் 34 தொழிற்சங்கங்களில் ஒரு சங்கம் மாத்திரமேயாகும். இதுவரை இலங்கை மின்சாரசபையின் கட்டுப்பாட்டாளரை நியமித்தது இந்த சங்கமே.

கடந்த ஆண்டிலிருந்து இதனை நாம் நிறுத்தியுள்ளோம். பொறியியலாளர் சங்கமானலும், வேறு எந்தவொரு சங்கமானாலும் யோசனைகள், பரிந்துரைகளை முன்வைக்க முடியும். அவற்றில் யதார்த்தமானவற்றை நாம் நடைமுறைப்படுத்துவோம். அதற்காக ஒன்று அல்லது இரண்டு தொழிற்சங்கங்களின்அச்சுறுத்தல்களுக்குஅடிபணிந்து செயற்படுவதற்கு நாம் தயாராக இல்லை. - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணிலும் பேச்சும்

**வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி இன்று சந்தித்துப் பேசவுள்ளார். இந்தச் சந்திப்புக்கான நிகழ்ச்சி நிரல்என்னவென்பதுதெளிவுபடுத்தப்படவில்லை. இருப்பின் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் நடந்த இதுபோன்ற சந்திப்புக்களின் தொடர்ச்சியாகவே இதுவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

**2019 அரசுத் தலைவர் தேர்தல் முலம் பதவிக்கு வந்த அரசுத் தலைவரான கோட்டாபய ராஜபக்ச மக்கள் கிளர்ச்சியால் விரட்டியடிக்கப்பட்ட பின்னர் அதிகாரத்திற்கு வந்த உடனேயே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்று அறிவித்தவர் ரணில் விக்கிரமசிங்க. சுதந்திர தினத்திற்குள் தீர்வு என்கிற அவரது அறிவிப்பு அதற்கான எந்த முயற்சியுமே இன்றிச் செயலிழந்தது.**

**அதன் பின்னர் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துகின்றேன் என்று புறப்பட்டார். அதற்காகத் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுடனும் அவர் பல கூட்டங்களை நடத்தினார். ஆனால், சிங்களக் கடும்போக்குவாதிகளிடம் இருந்து அதற்கு எதிர்ப்புக் கிளம்பியதும், அரசமைப்பின் பிரதிகளை பிக்குகள் தீயிட்டு எரித்ததும் அந்த முயற்சிகளில் இருந்தும் அவர் பின்வாங்கினார்.**

**அதன் பின்னர் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்கிற பேச்சைக் கைவிட்டு, மாகாண சபைகளுக்கான பொலிஸ், காணி அதிகாரங்களைத் தவிர்த்து ஏனையஅதிகாரங்களையும்மாகாணசபைகளிடம் இருந்து மத்தி திரும்பப் பெற்ற அதிகாரங்களைத் திருப்பி வழங்குவதாகவும் தெரிவித்து, அதற்காக இடைக்காலச் சபை ஒன்றை நிறுவ இருப்பதாகவும் அறிவித்தார். அது தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரனுக்கு வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். அதில் ஒன்றுகூட நிறைவேற்றப்படவேயில்லை.**

**இந்தப் பின்னணியிலேயே அவர் மீண்டும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரகளை சந்திப்பதற்கான அழைப்பை விடுத்துள்ளார். அதிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு இநத அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் தெரிகின்றது. இதற்கு முன்னர் விடுக்கப்பட்ட அழைப்புக்களை அந்தக் கட்சி நிராகரித்ததன் பின்னணியில் அந்தக் கட்சி தவிர்க்கப்பட்டதா என்பதும் தெளிவில்லை. அதேநேரம் இன்றைய சந்திப்பில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக ஆராயப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தமிழ்க் கட்சிகள் முயற்சிக்கும் என்றும் தெரிகின்றது.**

**அடுத்தஆண்டில்அரசுத்தலைவர்தேர்தல்நடக்க இருக்கும் நிலையில் திடீரென அரசுத் தலைவர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சுக்களைமீண்டும்தொடங்குகின்றார்என்பதும் சந்தேகங்களை எழுப்புகின்ற கேள்வியே. தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றிக்கொண்டு அவர்களின் வாக்குகளையும் கவர்வதற்கான உத்தியாக அவர் இந்தப் பேச்சுக்களைப் பயன்படுத்தக்கூடும். அத்தகைய ஒன்றாக இந்தப் பேச்சுக்கள் இடம்பெறும் பட்சத்தில், பயனற்ற அந்தப் பேச்சுக்களைத் தவிர்ப்பதே சிறந்தது.**

# சிந்தனைகளை மனமிருத்தும் திருவெம்பாவும் மார்கழியும் !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

மார்கழி மாதத்தைப் பீடை பிடித்தமாதம் என்று சொல்லி சுபநிகழ்ச்சிகள் செய்வதைத் தவிர்த்துவிட்ட நிலையினைக் காண்கின்றோம். இது பற்றிய விளக்கத்தை நாம் அறிந்து கொள்ளுதல் அவசியமானதே. பல பெயர்கள் காலத்தின் போக்கால் கருத்து மாறுபட்டு வேறு ஒரு பொருளைஉணர்த்துவதுநடந்தே வந் திருக்கிறது. ஒப்பிலி அப்பன் என்னும் சுவாமியின் பெயரை உப்பிலி அப்பன் என மாற்றி - அந்த சுவாமி க்கு உப்பில்லாத பொருட்களையே நிவேதனம் செய்யும் வழக்கம் நாளடைவில் ஏற்பட்டுவிட்டது. அதே போன்றதே மார்கழி மாதம் பற்றியதுமாகும். பீடுடைய மாதம் என்பது பீடை உடைய மாதமாக்கப்பட்டு விட்டது. பீடு என்றால் பெருமையானது, உயர்வானது என்பது பொருளாகும்.திருவாதிரை நட்சத்திரம் ஆரு த்ரா என சமஸ்கிருதத்தில்வழங்கப்படுகின்றது. சிவனையும் ஆதிரையான் எனக் குறிப்பிடும் வழமையும் எமது சமயத்தில் இருக்கிறது.மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரதுக்கு முந்திய பத்து நாட்களும் திருவெம்பாவையாகக் கருதி திருவாதிரை இடம்பெறும் பத்தாம் நாளை ஆருர்த்தா தரிசனம் எனப் போற்றி சிவனை வழிபடும் வழக்கமும் இந்த மார்கழிக்கே உரியது என்பதும் முக்கியமானதாகும்.அது மட்டுமல்ல சம்பந்தப் பெருமான் அவதாரம் செய்தது கூட மார்கழித் திருவாதிரை என்றும், சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி அசையாத தேரை அசையச் செய்து சிவனது தேரினை வலம்வரச் செய்ததும் மார்கழித் திருவாதிரை என்றும், வியாக்கிரபாதர்.. பதஞ்சலி ஆகிய சிவனருள் பெற்ற முனிவர்களுக்குச் சிவன் தனது அருட் கூத்தினை நிக ழ்த்திக் காட்டியதும் கூட மார்கழித் திருவாதிரையில்த்தான் என்றும்அறி யக் கிடக்கின்றது. இந்த வகையிலும் மார்கழி மாதம் முக்கியத்துவம் மிக்கதாகவும் கொள்ளப்படுகின்றது.

மனிதர்களுக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும்.தை முதல் ஆனிமாத இறுதிவரை பகல்.ஆடிமுதல் மார்கழி மாத இறுதி வரை இரவு. இந்த இறுதியானது தேவர்களுக்கு விடியற்காலமாகும். இதனால் மார்கழி என்பது தேவர்களின் விடியற்பொழுதாகஇருப்பதால்அக் காலங்களில் காலையில் எழுந்து குளித்து,அனைவரும் பூஜை வழிபாடுகளை ஆற்றுவது மிகவும் நலனை விளைவிக்கும் என்பது நம்பிக்கையாகும்.இதனால்த்தான் மார்கழி மாதம் தேவ காரியங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது.

இந்தக் காலத்தில்த்தான் மார்கழி நோன்பும் வருகிறது. மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவையும் பாடப்படுகிறது.



ஆண்டாளின் திருப் பாவையும் பாடப்படுகிறது. திருப்பள்ளி எழுச்சி பாடப்படுவதும் குறிப்பிடத்தக்கது.தேவர்களுக்கு மட்டுமே உரிய மாதத்தில் வேறு எந்தவிதச் சிந்தனைகளுக்கும் இடம் கொடுக்கும் வண்ணம் ஏனைய வியங்களைச் செய்தல் தவிர்க்கப்பட்டதே அன்றி மார்கழி கூடாதது என்பதற்காகவோ மார்கழி பீடை பிடித்தது என்பதற்காகவே அல்ல என்பதை நாங்கள்யாவரும்நன்குவிளங்கிக் கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

மாதங்களிலே நான் மார்கழி என கண்ணன் பகவத்கீதையில் சொல் லுவதை மனத்தில் கொண்டால் மார்கழியின் மகத்துவம் யாவருக்கும் விளங்கிவிடும்.வடமொழியில் மார்கசீர்ம் என்று மார்கழி மாதம் அழைக்கப்படுகிறது. மார்க்கம் என்றால் வழி என்பது பொருள். சீர் ம் என்றால் உயர்ந்த என்பது பொருள்.எனவே மார்கழி என்பது உய ர்வுடையது என்பதை வடமொழியும் கூட எடுத்துக் காட்டுகிறது அல்லவா?

திருவண்ணாமலையில் மணிவாசகரால்பாடப்பட்டதுதான் 'திரு வெம்பாவை. திருவெம்பாவைப் பாடல்கள் அனைத்துமே கன்னிப் பெண்களால் பாடப்படும் விதத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இப்படியாகப் பாடும் பாடல் வகைகள் சங்க காலத்திலேயே இருந்திருக்கிறது.பரிபாடல், நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய சங்ககால நூல்களில் மார்கழி நோன்பு பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. இங்கு பாவை நோன்பு பற்றிய செய்திகளையும் காண்கின் றோம்.எனவே மணிவாசகப் பெருமானின் பாவையர் பற்றிய இந்த நிலையானது முந்தியும் இருக்கலாம் அல்லது பிந்தியதாகவும் இருக்கலாம் என்ற கருத்தும் இல க்கிய ஆராய்ச்சியாளரிடம் காணப்படுகின்றது. எது எப்படி இருப்பினும் - மார்கழி நோன்பு என்பது திருவெம்பாவையுடன் இணைகின்றது என்பதே முக்கிய செய்தி எனலாம்.

திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகும்.மேல் நாட்டிலிருந்து இந்தியா வந்த டாக்டர் ஜி.யூ. போப் என்னும் ஆங்கிலேயரின் மனத்தைத் தொட்டதே இந்தத் திருவாசம்தான். தனது மனத்தைப் பறிகொடுத்த திரு வாசகத்தை ஆங்கில மொழியில் மொழிமாற்றம் செய்தார் என்பதை யாவரும் அறிகின்றோம்.அந்த அளவுக்கு ஆத்மாவையே உருக்கி ஆண்டவனின் நினைப்பை ஊட்டவல்லது திருவாசகம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்பது எல்லோரதும் அவிப்பிராயமாகும். அந்தத்திருவாச கத்துக்குள் அமைந்திருப்பதுதான் திருவெம்பாவை ஆகும்.விடியற்காலையிலே எழுந்த கன் னிப் பெண்கள் வீடுதோறும் சென்று இறைவனது பெருமையினை எடுத்துச் சொல்லி இன்னும் ஏன் நித்திரை செய்கின்றாய் விரைவாக எழுந்துவா எல்லோரும் நீராடி இறைவனது புகழை ஏத்திப் பாடுவோம் என்று பக்தி ததும்ப அழைக்கும் விதத்தில் அமைந்ததுதான் திருவெம்பாவை என்பது குறிப்பிடத்தக்கது.



திரு + எம் + பாவை என்பது திருவெம்பாவை ஆகும். தெய்வத்தை நோக்கிய பக்தி நிலையில் நின்று பாடும் பாடல்கள் என்பதே இதன் அர்த்தம் எனவும் கொள்ளலாம்.ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ஏலோர் எம்பாவா என்றே முடிகின்றதைக் காண்கின்றோம். இதனைப் பாவைப் பாட்டு என்றும் நீராட்டுப் பாட்டு என்றும் குறிப்பிடுவார்கள். இளம்பெண்கள்தங்களுக்குநல்ல கணவர் அமைய வேண்டும் எனக் கருதி மார்கழி மாதத்தில் நோன்புநோற்பதுவழக்கம்.இந்தப் பெண்கள் அதிகாலைஎழு ந்து இறைவனது புகழைப்பாடி நீராடச் செல்லும் போது திருவெம் பாவை பாடல்களைப்பாடிச்சென்றுள்ளனர் என்பதையே இங்கு நாம் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாவையும் சான்றாகி நிற்கிறதெனலாம். இதனால்தான் சைவத் தலங்களில் திருவெம்பாவையும் வைஷ்ணவத்

(9ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# மின்சார பட்டியலுக்கமைய வறுமையை அளவீடுசெய்து பயனாளிகளைத் தெரிக

## சம்பிக்க ஆலோசனை



நலன்புரி கொடுப்பனவுகளுக்கான பயனாளிகளைத் தெரிவுசெய்யும் நடவடிக்கையில் கல்வி, சுகாதாரம் போன்றதுறைகளுக்குக்கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் குறைத்து வறுமை போன்ற விடயத்துக்கு முக்கியத்துவம் வழங்கி பயனாளிகளை தெரிவு செய்ய வேண்டும். மின்சாரப் பட்டியல் போன்ற அடிப்படை விடயங்களைக் கொண்டு வறுமையை அளவீடு செய்ய வேண்டியது அவசியமாகும், ஆகவே சரியான அளவீட்டை அடிப்படையாக எடுக்கும்போது அதனை எவராலும் மறுக்கவோ அல்லது சவாலுக்கு உட்படுத்தவோ முடியாது என நாடாளுமன்றவழிவகைகள்பற்றியகுழுவின்தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

நாடாளுமன்ற வழிவகைகள் பற்றிய குழு கடந்த வாரம் அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக ரணவக தலைமையில் நாடாளுமன்றத்தில் கூடியது. இதில் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளின் சேவையைப் பெற்றுக்கொள்வது குறித்துக் கலந்துரையாடப்பட்டது. இதற்காக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், நலன்புரி நன்மைகள் சபையின் பிரதிநிதிகள், சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் முதலாவது கட்டத்தை நடைமுறைப்படுத்துவதைசமுர்த்திஅபிவிருத்திஅதிகாரிகள்புறக்கணித்திருந்தமையால்குறித்த செயற்பாடுகிராமஉத்தியோகத்தர்களுக்கு ஆற்றுப்படுத்துப்பட்டதுடன் அவர்களின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் கொடுப்பனவு போன்ற பிரச்சினைகளால் அவர்களின் சேவையைப் பெறமுடியவில்லை. இந்த நடைமுறையைப் பயிற்சி அதிகாரிகளின் ஊடாக மேற்கொண்டதன் காரணமாக நடைமுறைச் சிக்கல்கள் பலவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டதாக குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

கிராம மட்டத்தில் சமூக நலன்புரி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அஸ்வெசும இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்தும்செயற்பாடுகளில்ஈடுபடுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இதற்கு சட்டரீதியான தடைகள் இல்லை என்பது இங்கு தெரியவந்தமையால் பயனாளிகளைத் தெரிவுசெய்யும் நடவடிக்கையில் கல்வி, சுகாதாரம் போன்றதுறைகளுக்குக்கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் குறைத்து வறுமை போன்ற விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இதனை ஆரம்பிக்குமாறும் ஆலோசனை வழங்கிய குழுவின் தலைவர், மின்சாரப் பட்டியல் போன்ற அடிப்படை விடயங்களைக் கொண்டு வறுமையை அளவீடு செய்ய வேண்டியதன் அவசியத்தைத் தான் ஆரம்பத்தில் இருந்து வலியுறுத்தி வருவதால் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும், சரியான அளவீட்டை அடிப்படையாக எடுக்கும்போது அதனை எவராலும் மறுக்கவோ அல்லது சவாலுக்கு உட்படுத்தவோ முடியாது என்றும் தெரிவித்தார்.

வறியோருக்கான பட்டியலைத் தயாரிக்கும் தேசிய பணியில் இணைந்து கொள்ளத் தயாரா? என்றும் குழுவின் தலைவர் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளிடம் வினவினார்.

அஸ்வெசும செயற்பாட்டின் இரண்டாவது கட்டத்தில் தாம் இணைந்துகொள்கின்றபோதும் 2002ஆம் ஆண்டு 24ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 21 மற்றும் 22 பிரிவுகளுக்கு அமைய பணியாற்றும்போது பொய்யான தகவல்களின் அடிப்படையில் தாம் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படுவதற்கும், தண்டனைக்கு உட்படுத்தப்படுவதற்குமான வாய்ப்புக்கள் இருப்பதால் இது குறித்த சட்ட ஏற்பாட்டை நீக்கித்தருமாறும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுவரை காலமும் குறித்த சட்டப்பிரிவின் ஊடாக எந்தவொரு அதிகாரிக்கும் எவ்வித அசௌகரியமும் ஏற்படவில்லை எனக் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.குறித்த சட்டத்தைத் திருத்துதல்,சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இடையில்எழுத்துமூலஇணக்கப்பாட்டை ஏற்படுத்துதல் மற்றும் நம்பிக்கை, நாட்டின் தேவையின் அடிப்படையில் சுமுகமான இணக்கப்பாட்டுக்கு அமைய பொறுப்பை நிறைவேற்றுதல் போன்று மாற்றுத் தெரிவுகளில் ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டும் என்றும்,வறியவர்களின் சூழலை நன்கு உணர்ந்து செய்யப்படவேண்டிய நடவடிக்கை என்பதால் குறித்த பணியை முன்னெடுப்பது முக்கியமானது என்றும் அவர் எடுத்துக் கூறினார்.

எவ்வாறாயினும் வாய்மொழி உடன்படிக்கைக்கு பதிலாக சட்டரீதியான குறித்த சட்டத்தைத் திருத்த வேண்டியதன் அவசியத்தையும் சமுர்த்தி அதிகாரிகள் வலியுறுத்தினர்.

அதன்படி,2002ஆம் ஆண்டு 24ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 21 மற்றும் 22 பிரிவுகளைத் திருத்துமாறு நிதி அமைச்சுக்கு குழு பரிந்துரைத்திருப்பதாகவும், இந்தப் பரிந்துரை நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

(05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup
Fruit Salad
Cream Caramel
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
Milk Drink
Pepsi M
Coca Cola Tin

காலைக்கதிர் Kalaikkathir

# புலம்பெயர்ந்தவர்களை மீள நாட்டுக்கு வரவழைக்க சூழல் உருவாகவேண்டும்

## அயலுறவு அமைச்சர் அலி சப்ரி கருத்து

அபிவிருத்திக்கான பயணத்திற்கு புலம்பெயர்ந்தவர்களுடன் வினைத்திறனாக செயற்பட வேண்டியது அவசியம். புலம்பெயர்ந்தவர்களை மீள நாட்டுக்கு வரவழைப்பதற்கான சூழலை உருவாக்க வேண்டும். நாட்டின் அரசமைப்புக்கு அமைவாக அவர்களுக்கான கௌரவம், உரிமைகள் தொடர்பான புரிதலை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அதற்கான சிறந்த முயற்சிகளாக நட்டஈடு வழங்குதல், காணாமல் போனோரைத் தேடுதல் மற்றும் வழக்கு தொடுத்தல் போன்ற இயலுமைகளுடன் கூடிய குறிப்பிடத்தக்க அளவு அதிகாரம் கொண்ட உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதற்கான சட்டமூலமொன்றை கொண்டுவரப்படவுள்ளது. - என்று அமைச் சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற தேசிய குடிபெயர்ந்தோர் தின நிகழ்விலேயே சாகலரத்நாயக்கமேற்கண்டவாறுதெரிவித்தார்.

இதன்போது வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்திருப்போர்தொடர்பானஅலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமும் சாகல ரத்நாயக்கவால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் பேராசிரியர் லக்ஸ்மன் சமரநாயக்க சிறப்புரை ஆற்றியதோடு, அவர் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்த இலங்கையர்களுக்கான அலுவலகத்துடன் இணைந்து ஆற்றும் பணிகளைப் பாராட்டும் வகையில், சாகல ரத்நாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகி யோரால் நினைவுப் பரிசொன்றும் வழங்கப்பட்டது.

குடிபெயர்ந்த இலங்கையருக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் வீ.கிருஷ்ணமூர்த்தி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கான அலுவலகத்தின் பணிகள் 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் டிசெம்பர் 18 ஆம் திகதி அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு உகந்த தினமாக அமையும் எனவும் தெரிவித்தார்.

பல்வேறு காரணங்களுக்காக 03 மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றனர் எனத் தெரிவித்த அவர், இந்நாட்டு பொருளாதாரத்தில் அவர்களின் பங்களிப்பு எத்தகையது என்பதைக் கடந்த காலங்களில் உணர்ந்துகொள்ள முடிந்தது எனவும் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்கான தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள் ஆகியோரும் பங்குபற்றிய இந்நிகழ்வில் குடிபெயர்ந்த இலங்கையர்கள் பலரும் தொழில்நுட்பத்தின் வாயிலாக இணைந்துகொண்டமை விசேட அம்சமாகும். (05)

# மன்னாரில் 525 ஜெலட்னைட் குச்சிகள் 354 டெட்டனேட்டருடன் ஒருவர் கைது

மன்னார் புதிய மூர்வீதி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது ஒரு தொகுதி ஜெலட்னைட் (டைனமைட்) மற்றும் டெட்டனேட்டர் குச்சிகளுடன் செவ்வாய்க்கிழமை காலை நபர் ஒருவர் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் மன்னார் பள்ளிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனவும் அவரிடம் இருந்து 525 ஜெலட்னைட் (டைனமைட்) மற்றும் 354 டெட்டனேட்டர் குச்சிகள் உட்பட இணைப்பு நூல் 10 றோலும் மீட்கப் பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களுக்கு அமைய மன்னார் மாவட்ட சிரேஸ்டபொலிஸ்அத்தியட்சகர்சந்திரபாலவின் பணிப்புரைக்கு அமைவாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் கேரத்தின் ஆலோசனையின் கீழ் ரத்ணமணல தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட தேடுதலின் போதே குருநாகல் பகுதியில் இருந்து விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் ஜெலட்னைட் (டைனமைட்) குச்சிகளையும் நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன். விசாரணையின் பின் மீட்கப்பட்ட ஜெலட்னைட் (டைனமைட்)மற்றும் டெட்டனேட்டர் குச்சிகள் உட்பட கைது செய்யப்பட்ட நபர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (05)








## பொது மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எந்தவொரு நபர் சார்பாகவும் நீதிமன்றத்தில் முற்படுவதற்கு சட்டத்தரணி ஒருவருக்கு உரிமை உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. சட்டத்தரணிகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்சட்டத்தரணிகள்மீதான தாக்குதலாகவே கருதப்படும்.

சுயாதீனத் தன்மை இன்மை, அரசியல் தலையீடு, பொலிஸாரின் அடாவடித்தனம், மற்றும் தடுப்புக் காவல் இறப்புகள் போன்ற காரணங்களால்பொலிஸார் மீதான நம்பிக்கை குறைந்து வருகின்றது.

சட்டத்தை திறம்பட அமுல்படுத்தவதற்கும், சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கும் பொதுமக்களின் நம்பிக்கையை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமானது. எதிர்த்தாக்குதல்களில் சந்தேக நபர்கள் கொல்லப்படுவதும், தடுப்புக்காவலில்மரணமடைவதும் அடிப்படைஉரிமைகளைமீறுவதும் சட்டத்தின் ஆட்சியை முழுமையாக மீறுவதாகவும் அமையும்.

அடுத்த பொலிஸ் மா அதிபரை நியமிக்கும்போது சிறந்த சேவை மற்றும் எந்தவிதமான குற்றச்சாட்டுமில்லாதபொதுமக்களின் நம்பிக்கையை வெல்லக்கூடிய ஒருவரை நியமிக்க வேண்டியது அவசியமாகின்றது.

டிசம்பர் 13ஆம் திகதி பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் மூன்று அதிகாரிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட மனுதாரர் ஒருவருக்கு இழப்பீடுகள் வழங்குமாறும், நீதிமன்றம் விடுத்த உத்தரவு நினைவில் கொள்ளத்தக்கது.

இந்தஉத்தரவைஅடிப்படையாக வைத்து அடிப்படை உரிமையை மீறிய வரலாற்றைக்கொண்ட குற்றவியல் குற்றச்சாட்டுள்ள அல்லதுசட்டவிரோதநடவடிக்கைகள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளபொலிஸ்மாஅதிபர் பதவிக்கு நியமிப்பது தகுதியற்ற விடயமாகும்.

எனவே பொலிஸ் மா அதிபர் நியமனத்தின் போது அரசியலமைப்பின்படி முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றுள்ளது.

## உடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மதிப்பிட்டு ஆற்றிய உரையானது கண்டிக்கதக்கதாகும்.

எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும் அரசமைப்பின் 13ஆவது பிரிவின் கீழ் எந்த நபர் சார்பிலும் சட்டத்தரணிஒருவர்ஆஜராகமுடியும். பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளை இலக்கு வைத்து அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் சட்டத்தரணிகள் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடையூறுஏற்படுத்துவதாகஉள்ளது.

ஆகவே இந்த விடயம் சம்பந்தமாக உடனடியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையீடுகளைச் செய்ய வேண்டியது அவசியமாகின்றதுஎன்றுகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் இருந்து 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மாணவர்களுக்குப் போதை மாத்திரைகள், போதை கலந்த பாக்குகள், மாவாபாக்குஉள்ளிட்டபோதைப் பொருட்களைவிற்பனைசெய்துவந்தனர்என்றுகுற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவர்களிடம்போதைப்பொருட்களை வாங்கி வந்த மாணவர்களையும் பொலிஸார் இனம் கண்டனர்.

அவ்வாறு இனம் காணப்பட்ட சுமார் 15 மாணவர்களையும் பொலிஸார் கடுமையாக எச்சரிக்கை செய்து, போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வை அவர்களுக்கு ஊட்டி , பெற்றோர்களிடம் கையளித்துள்ளனர்



காலைக்கதிர் Kalaikkathir

# பெருந்தோட்டப் பாடசாலைகளில் திறன் வகுப்பறைகளை நிறுவும் வேலைத்திட்டம் குறித்து இந்தியாவுடன் ஒப்பந்தம்

நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு உயர்தர வகுப்புக்களுக்கான 60 திறன் வகுப்பறைகளை நிறுவும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இரண்டுவருடங்களில் நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு உயர்தர வகுப்புக்களுக்கான 60 திறன் வகுப்பறைகளை நிறுவுகின்ற முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிதியுதவி வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

குறித்த முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய பெறுகை திணைக்களத்தின் விதந்துரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மதிப்பீட்டுச் செலவு 526.20 மில்லியன் ரூபா என்பதுடன், 2024 ஆம் ஆண்டுக்காக 310 மில்லியன் ரூபா நிதி யொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

# பயங்கரவாதத்துக்கு நிதி வழங்கலை முறியடிக்க ஆலோசனைச் செயலணி

பணத் தூய்மையாக்கல் தடுத்தல் மற்றும் பயங்கரவாத்துக்கு நிதி வழங்குதலை முறியடிக்கும் தேசிய ஒருங்கிணைப்பு குழுவுக்கு கரும நிர்ணய ஆலோசனை மற்றும் செயலணியை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பணத் தூய்தாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாத்துக்கு நிதியளித்தலை ஒழிப்பதற்காக தேசிய ஒருங்கிணைப்பு குழு, தொடர்புடைய அரச நிறுவனங்கள், சட்ட அமுலாக்க நிறுவனங்கள், ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகள் மற்றும் பணத் தூய்தாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்தக்கு நிதியளித்தலை ஒழிக்கும் முயற்சிகளுடன் தொடர்புபட்ட பிரதிநிதிகளைக் கொண்டமைந்துள்ளது.

தேசிய ஒருங்கிணைப்பு குழுவிலுள்ள செயன்முறையை முறைமைப்படுத்துவதற்காக குறித்த குழுவுக்கான கரும நிர்ணய ஆலோசனை வரைவு செய்யப்பட்டுள்ளது.

கருமநிர்ணய ஆலோசனை மற்றும் செயலணியை நிறுவுதல், பணத் தூய்மையாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாத்துக்கு நிதி யளித்தலை ஒழிக்கும் போது தோன்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது அரச நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகள் மற்றும் ஏனைய தரப்பினருக்கிடையில் வினைத்திறனான ஒருங்கிணைப்பை உறுதி செய்வதற்காக ஒரு செயலணியை நிறுவ வேண்டியது கட்டாயமானது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, தேசிய ஒருங்கிணைப்பு குழுவுக்கு உத்தேச கரும நிர்ணய ஆலோசனைக்காகவும், செயலணியை நிறுவுவதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)



# குவைத் அமீரின் மறைவுக்கு ரிஷாத் பதியுதீன் அனுதாபம்

குவைத் மக்களுக்கு மகத்தான சேவை ஆற்றிய அமீர் ஷேக் நவாஃப் அல் - அஹமது அல் - ஜாபர் அல் - சபா அவர்களின் மறைவுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள குவைத் தூதரகத்துக்குச் சென்று, இலங்கைக்கான குவைத் நாட்டின் பொறுப்பதிகாரி உஸ்மான் அல்-உமர் அவர்களை சந்தித்து தனது அனுதாபத்தை தெரிவித்துக்கொண்ட அவர், அங்கு வைக்கப்பட்டுள்ள அனுதாபப் பதிவேட்டிலும் தனது கருத்துக்களை பதிவு செய்தார்.

அவரது அனுதாபச் செய்தியில் -

'குவைத் அமீர் ஷேக் நவாஃப் அல் - அஹமது அல் - ஜாபர் அல் - சபா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகிறேன். அவரது ஆட்சிக் காலத்தில் குவைத் மக்களுக்கு மகத்தான சேவையை ஆற்றியவர். அவரின் மறைவால், அந்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள துயரத்தில் குவைத்தின் நீண்டகால நண்பர்களான இலங்கையர்களாகிய நாங்களும் பங்கேற்கின்றோம்.

அத்துடன், எல்லாம்வல்ல அல்லாஹ் அமீர் அவர்களின் சேவைகளைப் பொருந்திக்கொண்டு, அவருக்கு ஜன்னத்துல் பிர்தெளஸ் எனும் சுவனத்தில் உயர்ந்த இடத்தை வழங்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றோம்' என்று குறிப்பிட்டுள்ளார். (05)

# வெளிநாட்டு தமிழருடன் பேசும் ரணில் உள்நாட்டில் தமிழருக்குத் தவறான சமிக்ஞைகளை தருகின்றார்

## மனோ கணேசன் காட்டம்



வெளிநாட்டு தமிழருடன் பேசும் ரணில் உள்நாட்டில் தமிழருக்கு தவறான சமிக்ஞைகளை தருகிறார் என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் அறிக்கையொன்றில் மேலும் கூறியவை வருமாறு -

உலகத்தமிழர் பேரவை அங்கத்தவர்களை, தடை நீக்கம் செய்து, அழைத்து ஜனாதிபதி ரணில் பேசுவது நல்லதே. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அவர் உள்நாட்டில் தமிழருக்கு தொடர்ந்து தவறான சமிக்ஞைகளை தருகிறார். இதில் ஒன்று, மக்களுடன் எந்தவித நேரடி தொடர்புகளும் இல்லாத அமைச்சர் டிரான் அலசின் பேச்சை கேட்டு, எனது தொகுதி கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவுகளை ஆரம்பித்துள்ளமை ஆகும்.

இரண்டாவது, வடக்கு கிழக்கிலாவது மாகாணசபை தேர்தல்களை நடத்தி அங்கே மாகாணசபைகளை ஏற்படுத்த ரணில் தயாரில்லை என்பதாகும். மூன்றாவது, பாதீட்டில் ரணில் உறுதியளித்த, மலைநாட்டில் 10 பேர்ச் காணி வழங்கல் பொறுப்பையும், அதற்கு ஒதுக்கப்பட்டதாக கூறப்படும் 400 கோடி ரூபாவையும் இப்போது யார் வைத்திருக்கிறார்கள் என்பது தெரியாமையாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடந்த வாரம் அவரது நாடாளுமன்ற அலுவலகத்தில் நேரடியாக சந்தித்து மூன்று விடயங்கள் குறித்து கேள்விகளை எழுப்பி கோரிக்கைவிடுத்தேன்.

தற்போது சனத்தொகை புள்ளிவிவர கணக்கெடுப்பு சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளுக்கு மேலதிகமாக, உங்கள் அமைச்சர் டிரான் அலசின் பொலிஸ்காரர்களை தமிழர்களின் வீடுகளுக்கு சிங்களம் மட்டும் படிவங்களுடன் அனுப்பி, சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளை செய்து, எனது தொகுதி கொழும்பில் வாழும் தமிழர் மத்தியில் தேவையற்ற பதற்றங்களை ஏன் ஏற்படுத்துக்கிறீர்கள்?

குறைந்தபட்சம் உடனடியாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலாவது மாகாணசபை தேர்தல்களை நடத்தி, அங்கே முதற்கட்டமாக மாகாணசபை நிர்வாகங்களை ஏற்படுத்தலாம். அதை ஏன் இழுத்துக்கொண்டே போகிறீர்கள்?

மலைநாட்டு பெருந்தோட்டங்களில், நீங்கள் பாதிட்டில் உறுதியளித்த 10 பேர்ச் காணி துண்டுகளை, பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களுக்கு வழங்கலாம்.

இந்திய, இலங்கை வீடமைப்பு திட்டங்களின் வீடு கட்டும் பணிகள், அரச நிர்வாக கட்டமைப்புகளின் ஊடாக நடைமுறையாக தாமதம் ஆகும். ஆகவே காணி வழங்கலுக்காக நீங்கள் ஒதுக்கிக்கொண்டுள்ள 400 கோடி ரூபாவைப் பயன்படுத்தி, காணிகளை பிரித்து வழங்கலாம். ஆனால், இந்த 10 பேர்ச் காணி வழங்கல் பொறுப்பையும், அதற்கு ஒதுக்கப்பட்டதாக கூறப்படும் 400 கோடி ரூபாவையும் இப்போது யார் வைத்திருக்கிறார்கள்?

இந்த கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதில் கூற வேண்டும். அல்லது அவருடன் கூட்டுகுடித்தனம் செய்கின்றவர்கள் பதில் கூற வேண்டும். இவை தொடர்பில் கடந்த வாரம் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த வெளிநாட்டு பிரதிநிதிகளுடனான சந்திப்பில், இலங்கைக்கான அமெரிக்கா, இந்தியா, சுவிஸ், நெதர்லாந்து, கனடா, பிரான்ஸ், தென்னாபிரிக்கா, இத்தாலி நாடுகளின் தூதுவர்களும் ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரிட்டன், நியூஸிலாந்து, ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளின் துணை தூதர்களும், முதன்மை அதிகாரிகளும் கலந்துக்கொண்ட நிகழ்விலும் அவர்களுக்கு விளக்கமாக நான் எடுத்து கூறி இருந்தேன். - என்றுள்ளது. (05)

# நான்கு நாள்களேயான குழந்தை பரிதாபச் சாவு

## யாழ்ப்பாணத்தில் துயரம்

பிறந்து நான்கு நாள்களேயான ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்த சம்பவம் யாழ்ப்பாணத்தை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த தம்பதிகளின் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த குழந்தை கடந்த 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் - திருநெல்வேலியில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் பிறந்துள்ளது. இந்நிலையில் தாயும் சேயும் கடந்த 16 ஆம் திகதி வீடு சென்றனர்.

இந்நிலையில் திங்கட்கிழமை மதியம் குழந்தையின் உடல் திடீரென குளிர்ந்ததுடன் உடலில் சிவப்பு கை காலில் அவதானிக்கப்பட்டது.

இந்நிலையில் குழந்தை மீண்டும் திருநெல்வேலியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டவேளை, அவர்கள் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். குழந்தையின் மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (05)

# மான் இறைச்சி, துப்பாக்கியுடன் குருநாகலில் இளைஞர் கைது

குருணாகல், எஹெதுவெள பொலிஸ் பிரிவுக்குஉட்பட்ட பகுதியில் மான் இறைச்சி மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் குருணாகல், கோன்வெள பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடைய இளைஞராவார்.

எஹெதுவெள பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவரிடத்திலிருந்து 7 கிலோ 250 கிராம் நிறையுடைய மான் இறைச்சி மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எஹெதுவெள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ரயிலில் மோதியதில் குடும்பஸ்தர் இறப்பு

## கிளிநொச்சியில் துயரம்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதயநகரை குறுக்கறுத்துச் செல்லும் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் 34 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற ரயிலில் மோதுண்டு இலக்கம் 188 கிருஷ்ணாபுரம் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய கணேசன் ரமேஷ்குமார் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே பாதுகாப்பற்ற ரயில் கடவையை மோட்டார் சைக்கிளுடன் கடக்கமுற்பட்ட வேளையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து இடம்பெற்ற இடத்தில் இருந்து உடனடியாக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளையில் இறந்துவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியப் பண்ணைகளிலிருந்து தொடர்ந்தும் முட்டைகளை இறக்குமதிசெய்ய அரசு முடிவு

உள்நாட்டு சந்தையில் முட்டை விலையை உறுதிப்படுத்துவதற்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தால் விதந்துரை செய்யப்பட்ட பண்ணைகளிலிருந்து முட்டைகளை இறக்குமதிசெய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உள்நாட்டு சந்தையில் முட்டை விலையை உறுதிப்படுத்து-வதற்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ள இந்திய பண்ணைகளிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்காக கடந்த ஒகஸ்ட் 14ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சமகாலத்தில் வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்தின் மூலம் 155 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன், 2023.12.31 திகதிக்கு முன்னர் மேலும் 18 மில்லியன் முட்டைகளை இறக்குமதிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

சமகாலத்தில் திறந்த சந்தையில் முட்டையின் சில்லறை விலை அதிகரிக்கும் போக்கு நிலவுகிறமையால், உள்ளூர் திறந்த சந்தையில் முட்டை விலையை நிலைப்படுத்து-வதற்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கத்தால் ஏற்கனவே விதந்துரை செய்யப்பட்ட இந்திய பண்ணைகளிலிருந்து தொடர்ந்தும் முட்டைகளை இறக்குமதிசெய்வதற்காக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

# தர்மம் தவறாத ஊடகப் பணியை முன்னெடுத்தவர் பி.எம்.ஏ.காதர்

## ரிஷாத் எம்.பி. அனுதாபம்

நாடறிந்த ஊடகவியலாளரும் நல்லுள்ளம் கொண்டவருமான பி.எம்.ஏ.காதரின் மரணச் செய்திகேட்டு கடுங்கவலையடைந்துள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானரிஷாத்பதியுதீன் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

'எனக்குத் தெரிந்தவரை மர்ஹூம் பி.எம்.ஏ.காதர் மிக மரியாதையுடன் பழகும் ஒருவர். அவரைச்சுற்றி பெரிய நண்பர் வட்டமே வளருமளவுக்கு அவரது நற்குணங்கள் வித்திட்டன. தர்மம் மீறாமலும் கடமை தவறாமலும் ஊடகப்பணிபுரிந்த உத்தமரென்றும் இவரைச் சொல்லலாம். மக்களின் பிரச்சினைகள், சமூகத்தின் சவால்களை தைரியமாக எழுதி தீர்வுகாண முயற்சித்த இவரது பணிகளை நான் பாராட்டுவேன்.



மருதமுனைக்கு கடந்த வாரம் சென்றிருந்தபோது, அவர் சுகவீனமுற்றிருப்பதை அறிந்து, அவரதுஇல்லத்துக்குச்சென்றுநலம் விசாரித்தேன். அப்போது எனது கையைஇறுகப்பற்றிக்கொண்டார். அடிக்கடிஎன்னைதொலைபேசியில் தொடர்புகொண்டுசமகாலஅரசியல் நிலைவரங்கள் குறித்து பேசுவார்.

சமூக அரசியலுக்கான அரசியலில் எந்தப்பாதை செல்வதென்ற தெளிவும் மர்ஹூம் காதரிடமிருந்தது. உணர்ச்சி அரசியலின்றி யதார்த்த வழிமு-றைகள்தான் நடப்பு சவால்களுக்கு தீர்வென்ற தெளிவும் இவரிடமிருந்தது.

இறைவனின் தவணை நெருங்கியதால் அவர் எம்மை விட்டுச்சென்றுவிட்டார். அன்னாரது நல்ல பணிகளுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் நற்கூலி கொடுப்பானாக..! அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு பொறுமையை வழங்குவானாக..! ஆமீன்...! –என்றார். (05)

# யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம் வடமராட்சி துன்னாலை கிழக்கு பகுதியில் பெண்ணொருவர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

51வயதான குறித்த பெண் தனது ஆடைக்குள்ஹெரோயினைமறைத்து வைத்திருந்த நிலையில் நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

ஆறு கிராம் அளவுள்ள ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரை பருத்தித்துறைநீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

# தென்கிழக்கு பல்கலை கல்விசாரா ஊழியர்களுக்கு இலகு முகாமைத்துவம் குறித்த பயிற்சிப் பட்டறை

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழிலாளர் மேம்பாட்டுமையம்ஏற்பாடுசெய்திருந்த இலகு முகாமைத்துவம் என்ற தொனிப்பொருளிலான பயிற்சி பட்டறை ஒன்று காஞ்சிரங்குடா கால்நடை வளர்ப்பு விவசாய பயிற்சிநிலையத்தில்தொழிலாளர் மேம்பாட்டுமையத்தின்தலைவர் பேராசிரியர் சல்பியா உம்மா தலைமையில் இடம்பெற்றது.

ஊழியர்கள் தங்களது கருமங்களை இலகுவாக ஆற்றுவதற்கான பல்வேறு யுக்திகளை பயிற்சி பட்டறையின் வளவாளர்களாக கலந்துகொண்ட பேராசிரியர் எம்.சி.ஏ. நாசர், மற்றும் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா ஹசன் எம்.ஜி. கலாநிதி எம்.ஐ. நௌபல் ஆகியோர் எடுத்துக் கூறினார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களில் 50 பேர் குறித்தவதிவிடபயிற்சிபட்டறையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். தொடர்ச்சியாக அலுவலக கடமைகளில் ஈடுபட்டுவருவதால் ஏற்படும் சோர்வு நிலை போக்கி ஊழியர்கள் ஓரிடத்தில் ஒன்று கூடியதால் தாங்களிடையே அன்னியோன்யம் மேலும் அதிகரித்துள்ளதாக இங்கு கலந்து கொண்ட ஊழியர்ஒருவர்கருத்துத் தெரிவித்தார். குறித்த பயிற்சி பட்டறையில் தான் பல்வேறு புதிய விடயங்களை அறிந்து கொண்டதாகவும் இவ்வாறான பயிற்சி நிகழ்வுகள் இன்னும் இடம்பெறவேண்டும் என்றும் பயிற்சி பட்டறையை ஏற்பாடு செய்திருந்த பேராசிரியர் சல்பியா உம்மாஉள்ளிட்ட அணியினருக்கு நன்றிதெரிவிப்பதாகவும்இன்னும் ஒருவர்கருத்துவெளியிட்டார். (05)

# இணையம் ஊடாக நடந்த சிறுவர் துஷ்பிரயோகங்கள்

## பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

2023 ஆம் ஆண்டில் இணைய வழி ஊடாக இடம்பெற்ற 98,000 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என பிரதி காவல் துறைமா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

2022 ஆம் ஆண்டில், இணையவழி ஊடாக இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் 146,000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சிறுவர் துஷ்பிரயோ-கத்துக்கு ஆளாகும் சம்பவங்கள் அடிக்கடி பதிவாகி வருகின்றன.

இதனைத் தடுப்பதற்காகப் பராமரிக்கப்படும் சர்வதேச தரவு அமைப்புடன் இணைந்து பணியாற்றுவதற்கு பொலிஸின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

நபரொருவர் சமூக ஊடகங்களில் அல்லது இணையத் தளத்தில் சிறுவர்களின் நிர்வாணப் படங்கள் மற்றும் அது தொடர்பான காணொளியை பதிவிடுதல், பகிர்தல் அல்லது பார்வையிடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவாராயின் அது குறித்த தகவல் விடயத்துடன் தொடர்புடைய சமூக ஊடகங்கள் மற்றும் பிற சேவை வழங்குநர்களால் சேகரிக்கப்பட்டு, குறித்த தரவு அமைப்புடன் பகிர்ந்து கொள்ளப்படும்

பின்னர் குறித்த தரவு அமைப்பால், அவ்வாறான தகவல் அடங்கிய விவரங்கள் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இருக்கும் நாடுகளுக்கு அனுப்பப்படும்.

இந்த தரவு அமைப்பின் ஊடாக இலங்கைக்கும் இது போன்ற தகவல்கள் கிடைத்துள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டார். (05)



# வவுனியாவில் 64 குளங்கள் உடைப்பெடுப்பு இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை

வவுனியாவில் 479 குளங்கள் வான்பாய்வதுடன் இதுவரை 64 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக பெய்து வருகின்ற மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களிற்கான நீர் வரத்து அதிகரித்தமையால், பெரும்பாலான குளங்கள் வான் பாய்கின்றன.

குறிப்பாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 620 குளங்களில் 456 குளங்களும், மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் 17 குளங்களும், மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் 6 குளங்களும் வான் பாய்கின்றன என இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பாலிக்குளம், சின்னசிப்பிகுளம், தேக்கம்குளம், பிரமநாலங்குளம், பரயநாலங்குளம் உட்பட 64 குளங்கள் உடைப்பெடுத்த நிலையில் கமநல அபிவிருத்தி திணைக்களம், இராணுவம், கிராமமக்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் இணைந்து குளங்களை மறுசீரமைத்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# ஜனாதிபதி சுயாதீனமாக செயற்படுதல் வேண்டும்

## ரவி கருணாநாயக்க 'அட்வைஸ்'



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராக களமிறங்குவார் என முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய கட்சிகளும் இணைந்து இந்தநாட்டை அபிவிருத்திப்பயணத்தில் கொண்டு செல்கின்றன.

மேலும் நாடு இலகுவான பயணம் செல்லவில்லை. இருண்ட பயணம் ஒன்றையே முன்னெடுக்கின்றது.

எனினும் ஒருவித முன்னோக்கு பார்வையுடன் கூடிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

மக்களுக்கு முழுமையான நிவாரணங்களை வழங்க முடியாவிட்டாலும் அவர்களைப் படுகுழியில் இருந்து வெளியே கொண்டுவந்து பாதுகாப்பாக முன்னோக்கிக் கொண்டு செல்வதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

2024 ஆம் ஆண்டு மக்களுக்கும் நாட்டுக்கும் மங்களகரமான ஆண்டாக இருக்கும் என்று நம்புகிறோம்.

ஜனாதிபதி என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்க சுயாதீனமான ஜனாதிபதியாக செயற்பட வேண்டும். அவர் அனைத்து கட்சிகளின் கூட்டாகதான் இதனைச் செய்கிறார்.

பலரும் போட்டியிட விரும்புகிறார்கள். ஆனால் ஒரு நாடு ஆபத்தில் இருக்கும் போது நாட்டுக்கு பாதுகாப்பை கொடுக்கும் தலைமைத்துவம் இருக்கும் நபர்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றார்கள். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# உயர்தரப் பரீட்சை குறித்த செயலமர்வுகளுக்கு தடை

2023 ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை தொடர்பான தனியார் வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் நடத்துவது டிசெம்பர் 29 நள்ளிரவு முதல் நிறுத்தப்பட வேண்டும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையை 2024 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

மேலும் இந்த தடையை மீறுவோருக்கு எதிராக கடும்நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (05)

# வற் வரி அதிகரிப்பு அடுத்த ஆண்டு பிரதானமான பேசு பொருள் ஆகும்

## மஹிந்த ராஜபக்ச சுட்டிக்காட்டு



வற்வரிஅதிகரிப்புகொள்கை 2024ஆம் ஆண்டுகாலப்பகுதியில் பிரதான அரசியல் பேசு பொருளாக அமையும். வரி அதிகரிப்பு பாரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல் மூலம் நிலையான அரசாங்கத்தை அமைப்பதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதன்மையான கடமை எனவும் அவர் கூறியுள்ளார்.

வரி அதிகரிப்பு தொடர்பான ஊடக அறிக்கையிலேயே முன்னாள் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற போதிலும், தற்போதைய அரசாங்கத்தின் தலைவரும் அரச தலைவரும் அந்தக் கட்சியின் கொள்கையிலிருந்து வேறுபட்ட கொள்கையைப் பின்பற்றும் அரசியல் கட்சியின் தலைவரே எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# இ. போ. சவின் மட்டக்களப்பு வீதி பஸ் சாரதி தாக்கப்பட்டமையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்









தனியார் பஸ் சாரதி மற்றும் நடத்துநர்களால் இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு வீதி பஸ் சாரதி தாக்கப்பட்டமைக்கு நீதி வேண்டி புதன்கிழமை களுவாஞ்சிகுடி சாலைஊழியர்கள்வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான நபர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் குறித்த சம்பவம் தொடர்பாக கொக்கட்டிச்சோலை பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த முறைப்பாடு தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை எனவும்இலங்கைபோக்குவரத்துச் சபையின் களுவாஞ்சிக்குடி போக்குவரத்துசாலைஊழியர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை புதன்கிழமை எடுக்கப்படாவிட்டால் பணிப்பகிஸ்கரிப்பு தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் களுவாஞ்சிகுடி போக்குவரத்து சாலை ஊழியர்கள் பணிபகிஸ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதுடன் பதாகைகளை ஏந்தியவாறுகளுவாஞ்சிகுடிசாலை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (05)

# போதைப் பொருள் வர்த்தக சந்தேகநபரின் 10 கோடி ரூபாய் சொத்துக்கள் சிக்கின

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் பூஸ்ஸ சிறைச்சாலையில் உள்ள சந்தேகநபருக்கு சொந்தமான கஹதுடுவ மூனமலவத்த பிரதேசத்தில் போதைப்பொருள் வர்த்தகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் பத்துக் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சொத்து எவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதை வீட்டின் உரிமையாளர் வெளிப்படுத்தத் தவறியதால், சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என அந்தப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இரண்டு மாடி வீடு, சொகுசு கார், இரண்டு காணிகள் மற்றும் மூன்று மாடிக் கட்டடம் என்பன கைப்பற்றப்பட்டன என அந்த பிரிவு தெரிவித்துள்ளது. (05)

# தாய்லாந்தில் தொழில் வழங்குவதாகக் கூட்டிச்சென்ற 52 இலங்கையர்கள் பயங்கரவாத குழுவுக்கு விற்பனை

தாய்லாந்தில் தொழில் வழங்குவதாகக் கூறி ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட 52 இலங்கையர்கள், தாய்லாந்தின் மியன்மார் எல்லையைச் சேர்ந்த பயங்கரவாதக் குழுவினருக்கு சைபர்குற்றங்களுக்காகவிற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த இருவரால் இந்த இலங்கை இளைஞர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு வைத்து 5,000 அமெரிக்க டொலர்களுக்கு இவர்களை பயங்கரவாதகுழுவுக்குவிற்பனை செய்துள்ளமைதெரியவந்துள்ளது.

இந்தஇலங்கைபணியாளர்கள் தாய்லாந்தில் உள்ள பல்பொருள் அங்காடிகளில் பணிபுரிவதற்காக கடந்த ஆண்டு தாய்லாந்துக்கு அழைத்துச்செல்லப்பட்டு, பின்னர், இந்த பயங்கரவாத குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (05)

# மதுபோதையில் கார் ஓட்டிய பிரித்தானியப் பிரஜை கைது

மதுபோதையில் காரை செலுத்திச் சென்றார் எனக் கருதப்படும் பிரித்தானிய பிரஜை ஒருவர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் 22 வயதுடைய பிரித்தானிய பிரஜை யாவார்.

பொலிஸாரால்வாகனங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# சிந்தனைகளை மனமிருத்தும் ....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தலங்களில் திருப்பாவையும் மார்கழிமாதத்தில் பாடப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதா கும்.

முதல் நான்கு பாடல்களும் அதிகாலையில் நீராடப் புறப்பட்ட பெண்கள் இன்னும் நித்திரைவிட்டு எழாத தமது தோழியரை எழுப்புவதாக , அதற்கு அப்பெண்ணானவள் மறுமொழி கூறுவதாகவும் அமைந்திருக்கின்றது.

ஐந்தாம் பாடல் தொடக்கம் எட்டாம் பாடல் வரை உள்ளன நித்திரை விட்டெழும் பெண்கள் கூறும் விதமாக இருக்கின்றன.

ஒன்பதாம் பாடல் முதல் இருபதாம் பாடல் வரை நித்திரை கலைந்த பெண்கள் இறைவனைத் துதித்துப் பாடும்வகையில்அமைந்திருக்கின்றன.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி மாலறியா
நான் முகனும் காணா மலையினை என்னானை என்
அரையன் இன்னமுது என்று எல்லோமும் சொன்னோம்
கேள் கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
– பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப்பெற்றியனே
இவ்வானும் குவலயமும் எல்லோரும் – காத்தும்
படைத்தும் கரந்தும் விளையாடி
வேதப்பொருள் பாடி அப்பொருளாம் மாபாடி
சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தாழ்பாடி
ஆதி திறம்பாடி அந்தமாம் மாபாடிப் பேதித்து
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக் –
கண்ணார் அமுதமுமாய் நின்றான்

என்று திருவெம்பாவைப் பாடல்கள் – எல்லாம் வல்ல இறைவனைப்பற்றிப்பெண்கள் பாடிப் பரவுவதாக எமக்கொல்லாம் விளக்கி நிற்கின்றது எனலாம்.

திருவெம்பாவையும், திருப்பாவையும், மார்கழியில் அதிகாலை நேரத் திலே பாடும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே முதலில்சுட்டிக்காட்டப்பட்டபடிதேவர்களின் காலைப்பொழுதாக இருப் பது ஒருமுக்கிய காரணம் என்பதை நம்பிக்கை எனக்கொள்வோம். அதற்குப்பின்னும் பல காரணங்களும் இருக்கின்றன என்பதும் முக்கி யமானதாகும்.

அதிகாலையில் துயில் எழுவது என்பதே ஆரோக்கியத்துக் அடிப்படை அல்லவா? அதுவும் மார்கழியில் அதிகாலை துயில் எழுந்து நீராடுவது என்பது உடல் ஆரோக்கியம் சம்பந்தப்பட்டதாகும். மார்கழியில் ஏற்படும் காலநிலை மாற்றமானது உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தது என்று எமது முன்னோர்கள் அறிந்து வைத்திருந்தனர். அதனை அறிவுரை ஆக் கினால் யாவரும் புறந்தள்ளியும் விடக்கூடும் என்பதால் அதனை திருவெம்பாவையுடன்இணைத்துவிட்டனர் என்றேஎண்ண வேண்டியிருக்கிறது.

அதிகாலையில் விழித்தால் புத்தி தெளியும்.உடம்பில் இரத்தத்தில் நல்ல மாற்றம் ஏற்படும் நரம்புகள் உற்சாகம் பெறும்.பித்தம் தணி யும்.வாத, பித்தம் சமனிலைஅடையும்.இவையெல்லாம் ஆரோக்கியம் சம்பந்தமானவை. இவையாவுமேதிருவெம்பாவையினுள் அடங்கி இரு க்கிறது என்பதே இங்கு மிகவும் இன்றியமையாத வியமாகும் என்பதை அறிதல் வேண்டும்.

தமிழ்ப் பண்பு, அன்புணர்வு, ஒழுக்க நிலை, சமயமரபு, ஆத்ம ஞானம்அத்தனையும்திருவெம்பாவால் எமக்குக் கிடைக்கின்றது என்பதை யாவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

வெறுமனவே திருவெம்பாவைப் பாடாமல் அதனூடாக எங்களுக்குக் கிடக்கும் அரிய பெரிய வியங்களை அறிந்து கொண்டு கோவிலில் பாடுவோமேயானால் நிச்சயம் திருவெம்பா எமக்கெல்லாம் பெரும் பயன் உடையாதாகவே இருக்கும். வைகறைப் பொழுதை பிரம்ம முகூர்த்தம் என்று குறிப்பிடுவதையும் நாம் நோக்குதல் வேண்டும்.

மார் கழியை பகவத்கீதை போற்றுகின்றது. மார்கழியில்த்தான் ஆருர்த்தா தரிசனம் நடக்கின்றது. மார்கழியில்த்தான் சுவர்க்க வாசல் ஏகாதசி உற்சவமும் இடம்பெறுகிறது. சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் உகந்த தெய்வீக மாதமாக மார்கழி திகழ்கிறது என்பதையும் மனத்தில் கொள்ளுதல் முக்கியமானதே.திருவெம்பாவையும், திருப்பாவையும், இறைவன் புகழ் சேர்ப்பதற்கு மார்கழியில்த்தான் கோவில்கள் தோறும் பக்தியுடன் பாடப்படுகின்றன என்பதும் மிகவும் முக்கிய கருத்து என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.எனவேமார்கழியில் இறைவன் புகழ் பாடி எங்களின் வாழ்வு வளம்பெறப் பிரார்த்திப்போம்.

# 54 வயது விவசாயி கைது யானையின் சாவுக்காக

சோளம் பயிரிடப்பட்ட பகுதியை சுற்றி மின்சார கம்பியை பயன்படுத்தி வேலியிட்டதால் யானை ஒன்று உயிரிழந்த சம்பவம் தொடர்பில் 54 வயதான விவசாயி ஒருவர் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் கஹடகஸ்திகிலிய அலுவலக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஹடகஸ்திகிலிய ரத்மல்கஹவ பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய விவசாயி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கஹடகஸ்திகிலிய, நெலுகொல்லக்கடை பிரதேசத்தில் அமைந்துள்ள சோளப் பயிர் செய்கை காணியில் 35 வயதுடைய 8 அடி உயரமான யானை மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்தமையையடுத்தே அவர் சந்தேகத்தில்கைதுசெய்யப்பட்டுள்ளார். (05)

# விபத்துக்கு உள்ளாகிச் சிகிச்சை பெற்ற பெண் 96ஆவது பிறந்தநாள் கொண்டாடிய பின் சாவு

ஓட்டோவில் மோதி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பெண் ஒருவர்தனது96ஆவதுபிறந்தநாளை கொண்டாடிய ஏழு நாளகளுக்குப் பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தலவத்துகொட பிரதேசத்தை சேர்ந்த 8 பிள்ளைகளின் தாயாவார்.

இவர் உறவினரது வீடொன்றிற்கு சென்று கொண்டிருக்கும் போது வீதியில் பயணித்த ஓட்டோ மோதியதில் பலத்த காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் தலவத்துகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக களுபோவில போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவர் சிறிது குணமடைந்ததும் வீட்டிற்கு அழைத்து செல்லப்பட்ட நிலையில் தனது 96 ஆவது பிறந்த நாளை கொண்டாடியுள்ளார்.

இதனையடுத்து இவர் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# குடாநாட்டில் மழையால் 111 குடும்பங்கள் பாதிப்பு



யாழ்ப்பாண மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக111குடும்பங்களைச் சேர்ந்த 3849 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.12.2023இல் வெளியிடப்பெற்றது.